# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றல் அறிக்கை
# PERFORMANCE REPORT 2023




## මහා භාරකාර දෙපාර්තමේන්තුව
## பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்
## DEPARTMENT OF PUBLIC TRUSTEE

# 2023

## කාර්යසාධන වාර්තාව
## செயலாற்றல் அறிக்கை
# PERFORMANCE REPORT

මහා භාරකාර දෙපාර්තමේන්තුව

**பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர்திணைக்களம்**

Department of Public Trustee

# <u>*2023.12.31* இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை</u>
# <u>நிறுவனத்தின் பெயர் - பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்</u>
# <u>செலவுத் தலைப்பு- *205*</u>

## உள்ளடக்கம்


அத்தியாயம் *01* - நிறுவனத்தின் சுருக்க விபரம்/நடைமுறைப்படுத்தல் சுருக்கம்

அத்தியாயம் *02* – முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

அத்தியாயம் *03* - வருடத்தின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

அத்தியாயம் *04* - செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

அத்தியாயம் *05* - நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களின் *(SDG)* அடைவுச் செயலாற்றுகை

அத்தியாயம் *06* - மனித வள விபரக் குறிப்பு

அத்தியாயம் *07* - இணக்கப்பாட்டு அறிக்கை

## *01.*அத்தியாயம் - நிறுவனத்தின் சுருக்க விபரம்/ நடைமுறைப்படுத்தல் சுருக்கம்

### *1.1* அறிமுகம்

**பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவியும் சட்ட அதிகாரமும்**

**சட்டப் பின்னணி**

*1931* ஆம் ஆண்டின் *11* ஆம் இலக்க மற்றும் *1938* ஆம் ஆண்டின் *59* இலக்க கட்டளைச் சட்டங்கள் மூலமும், *1973* ஆம் ஆண்டின் *44* ஆம் இலக்க மற்றும் *1975* இலக்கம் ஆம் ஆண்டின் *25* ஆம் இலக்கச் சட்டங்கள் மூலமும், *1983* ஆம் ஆண்டின் *41* ஆம் இலக்க மற்றும் *1988* ஆம் ஆண்டின் *61* ஆம் இலக்க சட்டங்கள் மூலமும் திருத்தப்பட்ட *1922* ஆம் ஆண்டின் *1* ஆம் இலக்க பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் கீழ் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவி சுயாதீனமான சட்டசார் ஆளாக தாபிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த கட்டளைச் சட்டத்திற்கு இணங்க நிறுவனங்களும் அதன் நேர் எதிர்விளைவான விடயங்களும் நிர்வகிக்கப்படும்.

நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொடர்பில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்திற்கு மேலதிகமாக *1918* ஆம் ஆண்டின் *04* ஆம் இலக்க, *1934* ஆம் ஆண்டின் *1* ஆம் கட்டளைச் சட்டங்கள் மூலமும் *1968* ஆம் ஆண்டின் *7* ஆம் இலக்க மற்றும் *1971* ஆம் ஆண்டின் *30* ஆம் இலக்க சட்டங்கள் மூலமும் திருத்தப்பட்டவாறான *1917* ஆம் ஆண்டின் *9* ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம் ஏற்புடையதாகும் என்பதுடன், அச்சட்டம் மௌனமாகவுள்ள சந்தர்ப்பங்களில் ஆங்கிலச் சட்டத்தின் ஒப்புரவுக் கோட்பாடு ஏற்புடையதாகும்.

### *1.2* நிறுவனத்தின் நோக்கு, பணி

**நோக்கு**

*1922* ஆம் ஆண்டின் *01* ஆம் இலக்க பொது நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டம் மற்றும் *1917* ஆம் ஆண்டின் *09* ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க, இலங்கை குடியரசினுள் செல்லுபடியாகும் சட்ட வரையறையின் கீழ், நம்பகமான, பக்கச்சார்பற்ற மற்றும் வெளிப்படைத் தன்மையுடன், இலங்கையின் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் மற்றும் அவருடைய பதவியணியினர் நல்லெண்ணத்துடன் தமது தொழில்சார் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைறவேற்றுதல்.

**பணி**

இலங்கையில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவி மற்றும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களும் பொறுப்புக்களும் சட்ட வரையறைக்குள் வெளிப்படைத் தன்மையுடன் நடைமுறைப்படுத்துதல் மற்றும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தில் நம்பிக்கை வைத்து சேவைகளைப் பெறுவதற்கு வரும் தரப்பினருக்கு பக்கச் சார்பின்றியும் வினைத்திறனுடனும் அதிகபட்ச சேவையினை வெளிப்படைத் தன்மையும் வழங்குதல் மற்றும் அதன் மூலம் இலங்கை பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைத்தளத்தின் நற்பெயரை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மேம்படுத்தும் வித்திலும் பாராட்டப்படும் விதத்திலும் செயற்படுதல்.

### *1.3* பிரதான பணிகள்

**<u>பொதுநம்பிக்கைப்பொறுப்பாளரின்அதிகாரங்கள்மற்றும்வகிபாகம்.</u>**

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம், சிவில் வழக்கு நடவடிக்கைக் கோவை, நீதிமன்ற ஒழுங்கமைப்புச் சட்டம் மற்றும் ஏனைய எழுத்து மூலமான சட்டங்களின் அடிப்படையில் பின்வரும் பணிகள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- சாதாரண நம்பிக்கைப் பொறுப்பாளராகச்செயற்படுதல்
- பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயற்படுதல்.
- சொத்துக்களைச் சேகரித்தல் கட்டளையின் கீழ் சொத்துச் சேகரிப்பாளராகச் செயற்படுதல்
- பருவமடையாதவர்களின் சொத்துக்களுக்கான நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது உதவி நண்பராக (பாதுகாப்பு முகாமையாளராக) செயற்படுதல் (மாவட்ட நீதிமன்றமொன்றினால் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்தில்).
- புத்திசுயாதீனமற்ற ஆட்களின் சொத்து முகாமையாளராகச் செயற்படுதல் (மாவட்ட நீதிமன்றமொன்றினால் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்தில்).
- ஆசையாச் சொத்துக்களின் ஒப்பந்த முகாமையாளராகச் செயற்படுதல். (பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பாளராகச் உள்ள சந்தர்ப்பங்களில் அந்த நம்பிக்கைப் பொறுப்புக்களின் நியமிக்கப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்புச் சபை" ஊடாக காலத்துக் காலம் எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மாத்திரம் பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பாளர் கடமைப்பட்டுள்ளார்.)
- வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களின் அட்டர்னி தத்துவகாரராக அவர்களுக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை வழங்குவதற்காக அல்லது செலுத்துவதற்காகச் செயற்படுதல்.
- சிவில் வழக்கு நடபடி முறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நீதிமன்றத்தினால் சொத்துக்கள் தொடர்பிலும் ஏனைய விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுத்தல்.
- நீதிமன்றத்தினால் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பங்களில் உயில் எழுதப்படாத ஆளொருவரின் நிர்வாகியாகச் செயற்படுதல்
- குற்றமொன்றுக்காக சிறை தண்டனை அனுபவிப்பவர்களின் சொத்து முகாமையாளராகச் செயற்படுதல்.
- எவரேனும் ஆளொருவரின் உயிலைப் பாதுகாப்பாக வைத்திருப்பவராகச் செயற்படுதல்.
- விகாரைச் சொத்துக்களின் நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயற்படுதல்.

## ஏனைய துறைகளில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் தலையீடு.

பொது நம்பிக்கைப் பொறுப்புச் சட்டத்தில் பின்னர் சேர்க்கப்பட்ட திருத்தங்களுக்கு இணங்கவும் மற்றைய எழுத்து மூலமான சட்டங்களுக்கு இணங்கவும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் பின்னவரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- *1988* ஆம் ஆண்டின் *61* ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான பொது நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் *10 (அ)* ஆம் பிரிவுக்கு இணங்க ஊழியத்திற்காக வெளிநாடு செல்பவர்கள் வெளிநாட்டில் மரணிப்பார்களாயின் அவர்களுக்கு கிடைக்கும் நட்டஈட்டுத் தொகைகளை தங்கி வாழ்பவர்கள் மற்றும்/அல்லது சட்டபூர்வமான வாரிசுகள் மத்தியில் பகிர்ந்தளித்தல் மற்றும் தொழில் வாய்ப்புக்காக இலங்கைக்கு வெளியே செல்லும் இலங்கைப் பிரசைகள் வேலையில் ஈடுபட்டிருக்கும் போது மரணிக்கின்ற சந்தர்ப்பங்களில் ஏதேனும் நட்டஈடுகள் கிடைக்க வேண்டிய ஆட்களின் பெயர்களை பொது நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் பதிவு செய்ய வைத்தல்.
- *1944* ஆம் ஆண்டின் *28* ஆம் இலக்க விகாரைகள் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- *1981* ஆம் ஆண்டின் *42* ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான *1931* ஆம் ஆண்டின் *19* இலக்க பௌத்த விகாரைகள், தேவாலயங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்படும் பணிகளை நிறைவேற்றுதல்.
- *1981* ஆம் ஆண்டின் *42* ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான *1931* ஆம் ஆண்டின் *19* இலக்க பௌத்த விகாரைகள், தேவாலயங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்படும் பணிகளை நிறைவேற்றுதல்.

## பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள்.

இத்திணைக்களத்தில் உருவாக்கப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்புக்களின் குறிக்கோளுக்கு இணங்க/நீதிமன்றக் கட்டளைகளின் அடிப்படையில் பின்வரும் விடயங்களின் செயற்பாடுகளை மேற்கொண்டு சேவை வழங்கப்படுகின்றது.

- கல்வி கற்கும் பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்நோக்கும் பிள்ளைகளுக்கு ஊக்குவிப்பதற்காக புலமைப் பரிசில்கள் வழங்குதல்.
- அநாதரவான மற்றும் அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சையளிப்பதற்காக மருத்துவ உதவிகளை வழங்குதல்.
- சமயத் தலங்களின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திக்காக அமைக்கப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்புக்களின் குறிக்கோள்களின் அடிப்படையில் நிதியுதவி வழங்குதல்.
- அறக்கொடை அலுவல்கள்
- பல்வேறு காரணங்களினால் வாழ்வதற்குச் சிரமப்படும் அநாதரவான ஆட்களுக்கும் அத்தகைய ஆட்கள் உள்ள நிறுவனங்களுக்கும் உதவி வழங்குதல்.
- நம்பிக்கைப் பொறுப்புக்களை/மரணச் சொத்துக்களை முகாமை செய்தல்.
- விகாரைகள், தேவாலயங்கள் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட அசைசயாச் சொத்துக்களுக்கு கிடைக்கும் நட்டஈட்டுப் பணத்தை, பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் சிபாரிசின் அடிப்படையில் பகிர்ந்தளித்தல்.
- வரையறுக்கப்பட்ட ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியின் பங்குகளின் நம்பிக்கைப் பொறுப்பை அரசாங்கத்தின் சார்பில் வைத்திருப்பதன் மூலம் அக்கம்பனியின் செயற்பாடுகளை மேற்கொள்ளுதலும் மேற்பார்வை செய்தலும்.
- வெளிநாட்டு நட்டஈடாகக் கிடைக்கும் பணத்தை தங்கி வாழ்வோர் அல்லது சட்டரீதியான வாரிசுகள் மத்தியில் பகிர்ந்தளித்தல்.
- ஒரு அரசாங்க நிறுவனம் என்ற வகையில் உழைக்கும் வருமானத்தில் குறிப்பிட்டதொரு சதவீதத்தை பொதுத் திறைசேரிக்கு அனுப்புதல்.

## 1.4 ஒழுங்கமைப்புக்குறிப்பு

ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு - பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்



**அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு**

**விசேடவெற்றிகள்,சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்**

**திணைக்களத் தலைவரின் அவதானிப்பு**

இந்தத் திணைக்களத்தின் மூலம் பொறுப்புச் சொத்து நிர்வாகம் மற்றும் பொறுப்புக்களின் குறிக்கோளை அடைவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கமைய, அமுல்படுத்த வேண்டிய திட்டங்கள் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

**2.1 தோட்ட நிர்வாகம்**

தொடர்ச்சியாக நட்டத்தைப் பெற்றுவந்த தோட்டங்கள் குத்தகைக்கு விடப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றன. ஏனைய தோட்டங்கள் வருமான இலக்குகளை வழங்கியுள்ளதுடன் பல்வேறுபட்ட உள்ளக நிர்வாக நுட்பங்கள் பின்பற்றப்படுவதன் ஊடாகசெலவுகளைக் குறைத்து வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2.2 சொத்துநிர்வாகம்**

நீதிமன்ற உத்தரவுகளின் அடிப்படையில் அல்லது இறுதி விருப்பாவணத்தின் மூலம் உரித்தளிக்கப்பட்ட வீடுகள் மற்றும் ஏனைய ஆதனங்கள் இந்தத் திணைக்களத்துக்கு உரியதாக உள்ளன. அந்த ஆதனங்கள் ஊடாகக் கிடைக்கப்பெறுகின்ற வருமானத்தின் மூலம் அந்த ஆதனங்களின் உரிமையாளர்களது குறிக்கோள்கள் நிறைவேற்றப்படுகின்றன. இதன்கீழ் கருணைக் கொடுப்பனவு செலுத்துதல் அல்லது அவர்களது பொறுப்பாளர்களைப் பராமரித்தல் போன்ற செயற்பாடுகளும் உள்ளடங்குகின்றன.

திணைக்களத்துக்கு உரித்தாகவுள்ள, இதுவரைக்கும் அடையாளங் காணப்பட முடியாதுள்ள ஆதனய்களைத் தேடிக் கண்டறிவதற்கென குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், ஆதனப் பட்டியலொன்றைத் தயாரித்து எல்லா ஆதனங்களையும் ஆவணப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டு இருக்கின்றன. அதேபோல தற்போதைக்குள்ள தகவல் முறைமையை மேம்படுத்துவதன் ஊடாக எல்லா ஆதனங்களுக்கும் உரிய தகவல்கள் முறைமையினுள் உள்ளடக்கப்பட்டு பாதுகாக்கப்படுவதனை நோக்காகக் கொண்டுள்ளது. அவ்வாறே அனுமதியின்றி கைப்பற்றுவது தொடர்பில் பொலிஸ், பிரதேசசெயலாளர், நீதிமன்றம் போன்றவற்றின் உதவியுடன் தீர்த்துக்கொள்வதற்கான எதிர்கால படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 2.3 பொறுப்புஉதவிச் செயற்றிட்டங்கள்

இதன்கீழ் சமய, தனிநபர் பொறுப்பு, மருத்துவ உதவி மற்றும் புலமைப்பரிசில் போன்ற வகைகளிலான முறைகள் அமுல்படுத்தப்படுகின்றன.

இவ்வாண்டின் வட்டி வருமானம் மற்றும் ஏனைய வருமானங்கள் அதிகரித்தமை காரணமாக அதிக குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு இயலுமானதுடன், கோரிக்கைகளுக்கு ஏற்ப பாரியளவில் நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

மூச்செடுப்பதற்கான சுவாசப்பை பலம் குன்றிய புதிதாகப் பிறந்த சிசுக்களின் உயிரைப் பாதுகாக்கும் பொருட்டு தேவையான ' ளுரசகயஉவயவெ' மருந்தை பெற்றுக்கொடுப்பதற்காக சிசில் வனிகசூரிய நம்பிக்கைப்பொறுப்பின் 2023 ஆம் வருடத்தினது பொறுப்பு இலக்கை எய்துவதை நிறைவுசெய்து 2023.11.02 ஆம் திகதி பொது நம்பிக்கைப் பொறுப்பாளரினதும் பிரதி நம்பிக்கைப் பொறுப்பாளரினதும் பங்குபற்றுகையுடன் ' ளுயளந ய டியடில' செயற்றிட்டத்துக்கென நிதி உதவி வழங்கப்பட்டது.



1988 ஆம் ஆண்டில் ரீ.ஆர். விக்கிரமரத்ன அவர்களால் தாபிக்கப்பட்ட இந்த பொறுப்புநிதியத்தின் ஓர் இலக்காக இருப்பது, கொழும்பு காசல் வீதியிலுள்ள பெண்கள் மருத்துவமனைக்குத் உணவுப் பொருட்களை வழங்குவதாகும். அதற்கேற்ப, 2023.11.27 ஆம் திகதி குறித்த உலருணவுப் பொருட்கள் நோயாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.





**சமயஉதவி**

இறுதி விருப்பாவணங்கள் மற்றும் பொறுப்பு உறுதிகளில் உள்ள குறிக்கோளுக்கு அமைய சட்டரீதியான உடன்படிக்கைக்கு ஏற்ப சமயவழிபாட்டிடங்கள் மற்றும் சமய தன்மையிலான நிறுவனங்களுக்கு கொடுப்பனவு செய்தல் மற்றும் உதவி வழங்குதல் போன்றன இதன்கீழ் இடம்பெறுகிறது.

யூ.ரீ.பீ.ரீ சில்வா அவர்களின் 13 ஆவது நினைவுதினத்தின் பொருட்டு அவரின் இறுதி விருப்பாவணத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2023.04.01 ஆம் திகதி சுமார் 35 பிக்குமார், பிக்குனிகளுக்கு அன்னதான நிகழ்வொன்று கௌரவ பொதுநம்பிக்கைப் பெறுப்பாளரின் தலைமையின் கீழ் திணைக்கள வளாகத்தில் நடைபெற்றது.





**தனிநபர் பொறுப்பு உதவிகள்**

திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள நம்பிக்கைப்பொறுப்பு மற்றும் இறுதி விருப்பாவணங்கள் மூலம் பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் பெருந்தோட்டங்களின் நிறைவேற்றுனராக நியமனம் செய்யப்பட்டுள்ள மரணசாசன சொத்துக்களில் பகுதியளவான பயன் பெறுனர் நிச்சயித்து குறிப்பிடப்பட்டுள்ள நம்பிக்கைப்பொறுப்பு மற்றும் பெருந்தோட்டங்களுக்குரிய குறிக்கோளை நிறைவேற்றுவதற்கும் பொதுவான குறிக்கோள் அல்லாத தனிப்பட்ட குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நம்பிக்கை நிதியங்களாகும். அதற்கமைய, கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்றன.

எஸ்.ஈ.ஜே. பயர் நம்பிக்கைப்பொறுப்பின் மூலம் அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவையிலுள்ள குறைந்த வருமானம் பெறுகின்ற 80 குடும்பங்களுக்காக நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

**மருத்துவஉதவிகள்**

இறுதி விருப்பாவணம் மற்றும் பொறுப்புநிதியங்களின் குறிக்கோளுக்கு அமையம ருத்துவமனைகள் மற்றும் நோயாளிகளுக்கு நிதி வசதிகள் மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் கோரப்படுவதன் மூலம் பயனாளிகள் தெரிவு மேற்கொள்ளப்படுகிறது.

1982 இல் வணக்கத்துக்குரிய யட்டிநுவர இந்ரரத்தின ஹிமியினால் தாபிக்கப்பட்ட இலங்கை தீவிர கவனிப்பு அலகின் நம்பிக்கைப்பெறுப்பினது குறிக்கோளாக இருந்தது இலங்கை தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான மருந்துகள், உபகரணங்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான உதவிகளை வழங்குவதாகும். குறித்தநம்பிக்கைப்பொறுப்பின் வருமானத்தில்,கத்தரிக்கப்பட்டபஞ்சு 500 கிராம் பொதிகள் 139 கொழும்புதேசியவைத்தியசாலைக்குபொதுநம்பிக்கைப்பொறுப்பாளர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினால் 2023 ஒக்டோபர் 23 ஆம் திகதியன்றுவழங்கப்பட்டது.



**புலமைப்பரிசில்**

நம்பிக்கைப்பொறுப்பின் இறுதிவிருப்பாவணத்தின் பிரதானகுறிக்கோள் புலமைப்பரிசில் வழங்குதல் என குறிப்பிடப்பட்டு நிறுவப்பட்டதே நம்பிக்கைப்பொறுப்பு நிதியமாகும். அதற்கமைய இறுதி விருப்பாவணங்களில் குறிக்கோள் நிறைவேற்றல் என்பதன் கீழ் இடம்பெறுவதுடன், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் அத்துடன் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கும் புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது.

### 2.4 வெளிநாட்டு இழப்பீடு

வெளிநாடுகளில் தொழில் புரியும் நபர்கள் மரணமடைதல் மற்றும் அங்கவீனமடைதல் போன்ற சந்தர்ப்பங்களில் அவர்களுக்காகக் கிடைக்கும் இழப்பீடு பொதுநம்பிக்கைப்பொறுப்பாளர் திணைக்களத்துக்குக் கிடைக்கிறது. ஆவை உரிய பின்னுரித்தாளர்கள் மற்றும் தங்கிவாழ்வோரை அடையாளம் கண்டு வழங்கப்படுகிறது. இந்த முறையில் 2023 ஆண்டில் 449,329,391.72 ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

### 2.5 விகாரை இழப்பீடு

1944 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க விகாரை காணி இழப்பீட்டு கட்டளைச் சட்டத்துக்கு அமைய வழிபாட்டிடங்களுக்குச் சொந்தமான காணிகளை அரச கருமங்களுக்காக கையகப்படுத்தும் போது வழங்கப்படும் இழப்பீட்டுப் பணம், பௌத்த விவகார ஆணையாளர் நாயகம் மற்றும் பொதுநம்பிக்கைப்பொறுப்பாளரின் அங்கீகாரத்துக்கு அமைய செலுத்துதல் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய 2023 ஆம் ஆண்டில் 284,344,362.73 ரூபா பணம் விகாரை இழப்பீடாக செலுத்தப்பட்டுள்ளது.

### 2.6 சட்டரீதியான செயற்பாடுகள்

இந்த ஆதனங்களின் பெருந்தோட்டங்கள் தொடர்பான பல வழக்குகள் இடம்பெறுகின்றன. நீதவான் நீதிமன்றில் 03 வழக்குகள், மாவட்ட நீதிமன்றில் 83 வழக்குகள், சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றில் 05 வழக்குகள், உயர் நீதிமன்றத்தில் 02 வழக்குகள், கமநல நியாயசபையில் 47 வழக்குகள் என்ற வகையில் தற்போது 140 வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சட்டம் மற்றும் விசாரணை என தனியான பிரிவொன்று தாபிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

## 2.7 அரச வருமானத்துக்கு பணம் செலுத்துதல்

1990 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 944/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய மூலதனக் கட்டணம், வருமான கட்டணம், முதலீட்டுக் கட்டணம், நம்பிக்கைப்பொறுப்புக் கட்டணம், சேவைக் கட்டணம் மற்றும் திணைக்களக் கட்டணம் என்றவாறு நம்பிக்கைப்பொறுப்பு நிதியங்கள் மற்றும் பெருந்தோட்டங்களிலிருந்து அறவிடப்பட்டு அரச கட்டண பணமாக மாதாந்தம் அரச வருமானத்துக்கு வரவு வைக்கப்படுகின்றது. அதற்கமைய 2023 ஆம் ஆண்டில் 15,381,686.45 ரூபா பணம் அரச வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

கிஹான் பிளபிட்டிய
இலங்கைபொதுநம்பிக்கைப்பொறுப்பாளர்

## 03. அத்தியாம் *03 – 2022* டிசம்பர் *31* ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

### *3.1* நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

**2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2023 | | குறிப்பு | உண்மை நிலை 2023 | உண்மை நிலை 2022 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 55,751,000 | 52,076,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 57,070 | 72,465 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 6,028,195 | 3,754,695 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **61,836,265** | **55,903,160** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **61,836,265** | **55,903,160** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | 375,521 | 3,890 | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **61,460,744** | **55,899,270** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 44,100,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 40,921,359 | 40,839,676 | ஏசீஏ-2(ii) |
| 36,249,750 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 31,793,980 | 27,243,982 | ஏசீஏ-2(ii) |
| 400,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 252,977 | 198,662 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| **80,749,750** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **72,968,316** | **68,282,320** | |
| | **மூலதன செலவினம்** | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3,000,000 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | **10** | 2,731,852 | 952,421 | **ஏசீஏ-2(ii)** |
| 1,750,250 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | **11** | 1,625,913 | 990,565 | |
| - | மூலதன மாற்றல்கள் | **12** | - | - | |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | **13** | - | - | |
| 500,000 | திறன் விருத்தி | **14** | 333,962 | 435,318 | |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | **15** | - | - | |
| **5,250,250** | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **4,691,727** | **2,378,304** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 57,070 | 72,465 | **ஏசீஏ-4** |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 6,305,186 | 4,275,325 | **ஏசீஏ-5** |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **6,362,256** | **4,347,790** | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | **84,022,299** | **75,008,414** | |
| **86,000,000** | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | **(22,561,555)** | **(19,109,144)** | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | **(22,561,555)** | **(19,109,144)** | **ஏசீஏ-7** |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | - | - | **ஏசீஏ-3** |
| | | | **(22,561,555)** | **(19,109,144)** | |

## 3.2 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

**2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | | உண்மை நிலை | |
|---|---|---|---|
| | குறிப்பு | 2023 | 2022 |
| | | ரூபா | ரூபா |
| <u>நிதி சொத்துக்கள் அற்றது</u> | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 54,245,380 | 35,511,536 |
| <u>நிதி சொத்துக்கள்</u> | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 11,390,866 | 11,113,875 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **65,636,246** | **46,625,411** |
| <u>தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு</u> | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 11,390,866 | 11,113,875 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 54,245,380 | 35,511,536 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| <u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u> | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | - | - |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **65,636,246** | **46,625,411** |

பக்க இலக்கம் 8 முதல் 25 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 26 முதல் 32 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ………………………… | ………………………… | ………………………… |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : | |
| திகதி : | திகதி : 2024/02/26 | திகதி : 2024.02.26 |

Somarathne Vidanapathirana
Secretary
Ministry of Buddhasasana, Religious & Cultural Affairs
No. 135, "Dahampaya"
Srimath Anagarika Dharmapala Mw.,
Colombo - 07.

GIHAN PILAPITIYA
PUBLIC TRUSTEE OF SRI LANKA
DEPARTMENT OF PUBLIC TRUSTEE
NO. 02, BULLERS LANE,
COLOMBO 07.

H. A. C. P. Dharmarathne
Chief Accountant
Department of Public Trustee
No. 02, Bullers Lane,
Colombo 07.

*3.3* **காசுப் பாய்ச்சல் கூற்று**

**ஏசீஏ- சீ**

# 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
# காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | **2023** | **2022** |
| | ரூபா | ரூபா |
| <u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 23,009,495 | 20,770,857 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 55,751,000 | 52,076,000 |
| முற்பணங்களை அறவிடல் | 6,305,542 | 3,237,362 |
| வைப்புக்களின் பெறுகை | 57,070 | 72,465 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **85,123,107** | **76,156,684** |
| <u>**கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு**</u> | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 72,796,916 | 68,218,360 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | - | - |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 1,124,542 | 1,383,330 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 375,521 | 3,890 |
| முற்பணக் கொடுப்பனவு | 6,077,331 | 4,100,335 |
| வைப்புக் கொடுப்பனவு | 57,070 | 72,465 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **80,431,380** | **73,778,380** |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **4,691,727** | **2,378,304** |
| <u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | **-** | **-** |

| | | |
|---|---|---|
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | | |
| **<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u>** | | |
| மூலதன செலவினம் | 4,691,727 | 2,378,304 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **4,691,727** | **2,378,304** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(4,691,727)** | **(2,378,304)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **-** | **-** |
| **<u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| உள்ளுர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **-** | **-** |
| ***<u>கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:</u>*** | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **-** | **-** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | **-** | **-** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | **-** | **-** |
| **ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **-** | **-** |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **-** | **-** |

## 3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### அறிக்கையிடலின் அடிப்படை

1) அறிக்கையிடல் காலப்பகுதி

இந் நிதிக் கூற்றுக்களுக்கானஅறிக்கையிடல் காலப்பகுதி 2023 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) அளவீட்டுக்கானஅடிப்படை

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சிலசொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.
நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) வருமானத்தைஅடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) சொத்து, இயந்திரமற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.
கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) சொத்து, இயந்திரமற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரணகணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) காசுமற்றும் காசுக்குசமமானவை

காசுமற்றும் காசுக்குசமமானவை 2023 டிசம்பர் 31இல் உள்ளஉள்நாட்டுநாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களைஉள்ளடக்கியதாகும்.

### 3.5 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை (ரூபா,000)

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டு விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுமதி மதிப்பீடு | தொகை | இறுத வருமான மதிப்பீட்டின் % ஆக |
| 2002.02.99 | Interest, Other | 450 | 450 | 432 | 96% |
| 2003.99.00 | Other Receipt | 11,000 | 11,000 | 20,714 | 188% |

### 3.6 6ஒதுக்கபட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதலின் செயலாற்றுகை

ரூபா.,000

| ஏற்பாட்டு வகை | ஒதுக்கப்பட்ட ஏற்பாடு | | உள்ளபடியான செலவு | பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள், பூர்த்தி செய்யப்பட்ட ஏற்பாடுகளின் % ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஏற்பாடுகள் | இறுதி ஏற்பாடுகள் | | |
| **மீளெழும்** | 81,000 | 80,750 | 72,968 | 90% |
| **மூலதன** | 5,000 | 5,250 | 4,691 | 89% |

### 3.7 நி.பி. 208 இற்கு இணங்க, ஏனைய அமைச்சுக்களின்/ திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இந்த திணைக்களத்துக்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாணசபைகளுக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்

ரூபா ,000

| தொடர் இலக்கம் | ஏற்பாடு கிடைத்த அமைச்சு/ திணைக்களம் | ஏற்பாட்டின் குறிக்கோள் | ஏற்பாடு | | உள்ளபடியான செலவு | பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள், வழங்கிய இறுதி ஏற்பாடுகளின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஏற்பாடுகள் | இறுதி ஏற்பாடுகள் | | |
| - | - | - | - | - | - | - |

### *3.8* நிதியல்லா ஆதனங்களை அறிக்கைப்படுத்தல்செயலாற்றுகைரூபா *,000*

| ஆதனக் குறியீடு | குறியீட்டு விபரம் | *2022.12.31* இல் உள்ளவாறான பொருட்தொகை மதிப்பாய்வு அறிக்கைக்கு இணங்க மீதி | *2022.12.31* இல் உள்ளவாறான நிதி நிலைமை அறிக்கைக்கு இணங்க மீதி | எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப்படவுள்ளவை | முன்னேற்றம் % ஆக அறிக்கைப்படுத்தல் |
|---|---|---|---|---|---|
| *9151* | கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் | - | - | - | - |
| *9152* | இயந்திரங்கள் | 54,245 | 54,245 | - | 100% |
| *9153* | காணிகள் | - | - | - | - |
| *9154* | தொட்டுணர முடியாச் சொத்துக்கள் | - | - | - | - |
| *9155* | உயிரில் சொத்துக்கள் | - | - | - | - |
| *9160* | செய்யப்பட்டு வரும் வேலைகள் | - | - | - | - |
| *9180* | குத்தகைக்கு விடப்பட்டள்ள சொத்துக்கள | - | - | - | - |

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இலக்கம் :சீஏஏ/சீ/டீபீரீ/2/2022/05

திகதி : 2022.மே.03

பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர்
பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்

**தலைப்பு 205 - பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் சாரம்ச அறிக்கை**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிலைப்பாடு

தலைப்பு 205 - பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தின் முடிவுற்ற வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் நிதிப்பாய்ச்சல் பற்றிய கூற்றுக்களைக் கொண்டு 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(l) ஆம் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த நிதிக்கூற்றுக்கள் பற்றிய எனது கருத்து வெளிப்படுத்தல்கள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு அதிகாரிக்கு வருடாந்தம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை சமகாலத்தில் வழங்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் அறிக்கை சமகாலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களில் உள்ள பாதகங்களை விடுத்து, நிதிக் கூற்றுக்களில் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியன்று பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அன்றைய தினத்துடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதிப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மூலக்கோட்பாடுகளுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்துகின்றது என்பதுவே நான் கொண்டிருக்கும் கருத்தாகும்.

## 1.2 நிலைமதிப்பிடப்பட்ட கருத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து நிலைமதிப்பிடப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு தரநியமங்களுக்கு (இ.க.த) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிதிக்கூற்று தொடர்பில் எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. என்னுடைய கருத்துக்கான அடிப்படை ஒன்றை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவையும் உசிதமானவையும் என்பது என்னுடைய நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மூலக்கோட்பாடுகளுக்கு ஏற்ப மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, உண்மையானதும் நியாயமானதுமான நிலைமை ஒன்றை வெளிப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் ஊழல் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான கணிசமான அளவு பொய்யான கூற்றுக்களுக்கு மாறாக நிதிக்கூற்றுக்களை தயார் செய்யகூடியவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலத்துக்கேற்ப நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு சுய வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதி கட்டுப்பாட்டுக்கென பயனுறுதிவாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை தயார்செய்து கொண்டுநடாத்தப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் அந்த முறைமையின் செயற்றிறன் தொடர்பில் காலத்துக்குக் காலம் மீளாய்வு ஒன்றை மேற்கொண்டு அதற்கேற்ப முறைமையைப் பயனுள்ளதாக கொண்டுநடாத்தத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புகள்.

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், ஊழல் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் கணிசமானளவு பொய்யான கூற்றுக்களின்றி காணப்படுவதாக நியாயமான சான்றுறுதியொன்றை வழங்குவதும் எனது கருத்துக்களை உள்ளடக்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதியை வழங்குதலானது, உயர்தரத்திலான உறுதி ஒன்றை வழங்குதலாக அமைகின்றபோதிலும் இலங்கை கணக்காய்வு தரநியமங்களின் பிரகாரம் கணக்காய்வுகளை மேற்கொள்ளும்போது, அது எப்போதும் கணிசமானளவு பொய்யான கூற்றுக்களை இனங்கண்டு கொள்கின்றது என வழங்கும் உறுதி ஒன்றாக அமையாது. ஊழல் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது இணைந்தோ செல்வாக்குச் செலுத்துவதனால் கணிசமானளவு பொய்யான கூற்றுக்கள் உருவாகலாம் என்பதுடன், அதன் அளவுத்தன்மையானது இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரீட்சிக்கப்படுபவர்களால் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீதான செல்வாக்கின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் அடிப்படையில் கணக்காய்வின் பகுதியாக என்னால் கணக்காய்வின்போது தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகங்கள் போன்றவற்றுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வுக் கருத்துக்கு அடிப்படை ஒன்றை வழங்கும்போது ஊழல் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய கணிசமான அளவிலான பொய்யான கூற்றுக்கள் உருவாகக்கூடிய இடங்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்றவற்றுக்கென சமயோசிதத்துடன் உசிதமானமுறையில் கணக்காய்வு நடவடிக்கைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. கூட்டுநடவடிக்கை மூலம், போலியான ஆவணங்களைத் தயாரிப்பதன் மூலம், வேண்டுமென்றே தவிர்த்தலின் மூலம், தவறாகக் காட்டுவதன் மூலம் அல்லது உள்ளக நிர்வாகத்தைத் தவிர்ப்பதன் மூலம் ஆகிய காரணங்களினால் தவறாகக் காட்டப்பட்டமை காரணமாக ஏற்படும் கணிசமானளவு பொய்யான கூற்றுகளினால் ஏற்படும் தாக்கங்களை விட மோசடியினால் ஏற்படும் தாக்கங்கள் கடுமையானதாக அமைகின்றன.
- உள்ளக நிர்வாகத்தின் செயற்றிறன் பற்றிய கருத்தொன்றை வெளிப்படுத்தும் எண்ணம் இல்லாதிருந்தாலும், சந்தர்ப்பத்திற்கேற்ப உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக நிர்வாகம் தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்துக்குக் காரணமாக அமைந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடுக்கப்பட்டிருப்பதை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு ஏதுவாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டிருப்பதையும் மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல்கள் மதிப்பிடப்பட்டன.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டறிதல்கள், பிரதான உள்ளக நிர்வாக பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தரை அறியச்செய்தேன்.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பிலான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்படும் விடயங்களை நான் அறிவிக்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் பொருந்துகிறது.

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் வழங்கப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கடந்த வருடத்துக்குரிய அறிக்கையின் பந்தி குறிப்பு | நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்தி குறிப்பு |
|---|---|---|
| 2.3 (இ) | நீதி அமைச்சினால் 2019 ஆம் ஆண்டில் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்த 03 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதி அல்லாத சொத்துக்களுக்குள் உள்ளடக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1.6.1 |

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கருத்துக்களைத் தெரிவித்தல்

#### 1.6.1 நிதிசாரா சொத்துக்கள்

நிதி அமைச்சினால் 2019 ஆம் ஆண்டில் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்த 03 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதி அல்லாத சொத்துக்களுக்குள் உள்ளடக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 1.6.2 சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கு

கடந்த வருடத்தின் பொருட்கணக்காய்வு அறிக்கை மூலம் அப்புறப்படுத்தப்பட பரிந்துரைக்கப்பட்ட மரத் தளபாடங்கள், கணினி உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் உள்ளிட்ட 10 உருப்படிகளின் செலவுகளை கண்டறிந்து நிதிக்கூற்றுக்களில் சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணத் தலைப்பில் கழித்துக் காண்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 1.6.3 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் பிணை ஆவணமொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

2022 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்துக்கேற்ப நம்பிக்கை மற்றும் சொத்துக்களுக்கு பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் சட்டத்திற்கு இணங்க அறவிடப்பட்ட மூலதன, முதலீட்டு வருமான கட்டணங்கள் மற்றும் ஏனைய கட்டணங்களாக ரூபா. 8,500,000 வருமானத்தை மதிப்பீடு செய்திருந்தது என்பதுடன் ரூபா 19,214,500 வருமானம் திரட்டப்பட்டதாக 2023 மார்ச் மாதம் 10 ஆம் திகதிய இலக்கம் PT/2/CA/3/3/5/2/(II) பகுதி எனும் கடிதத்துக்கேற்ப அவதானிக்கப்பட்டது. அது, மதிப்பீட்டின் 226% சதவீதம் ஆகும். அதற்கேற்ப மதிப்பீடு செய்யும் பலவீனம் அவதானிக்கப்பட்டது.

### 2.2 செலவு முகாமைத்துவம்

205-01-1-2001 இன் கீழ் கட்டடம் மற்றும் நிர்மாணிப்புக்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா. 300,000 ஒதுக்கீட்டு நிதியில் நூற்றுக்கு 63 சதவீதம் பயன்படுத்தப்படாமல் மீதப்படுத்தப்பட்டிருந்தது.

### 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுறுதி

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்தும் அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) திணைக்களத்தின் நிதி முகாமைத்துவத்துக்கென செயற்றிறன்மிகு உள்ளக நிர்வாக முறைமையொன்று தயாரிக்கப்பட்டு கொண்டுநடாத்தப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியுள்ளதுடன் அந்த முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்து அதற்கேற்ப முறைமையை பயனுறுதிமிகுந்தவாறு செயற்படுத்திச்செல்லத் தேவையான மாற்றங்களை செய்ய வேண்டும் என்பதுடன் குறித்த மீளாய்வுகளை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தும், அத்தகைய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமை பற்றிய கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தினுள் தயாரிக்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் உட்பொருளுக்கு ஏற்ப வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனத்துக்கொள்ள வேண்டும் என்றாலும், அறிக்கையின் 3.1.1 (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் காரணமாக குறித்த தேவைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டம், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்காதிருத்தல் அவதானிக்கப்பட்டது

கீழே குறிப்பிடப்பட்டுள்ள சட்டம், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | சட்டம், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிமுறைகளுக்கான குறிப்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1922 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் 47(1) ஆம் பிரிவு | நம்பிக்கை / சொத்துக்கள் கணக்குகள் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டுக் கணக்குகளின் ஒரு பகுதியும் 2022 ஆம் ஆண்டுக்கென தயாரிக்கப்பட்ட நம்பிக்கை / சொத்துக்கள் இறுதிக் கணக்குகள் இந்த அறிக்கையின் தினமாகும் போதிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கத்தைக் கொண்ட அரச நிருவாக சுற்றறிக்கையின் 3.3 ஆம் பிரிவு | எரிபொருள் பயன்பாட்டில் பிரதிகூலமான வேறுபாடொன்று காணப்படின் அதை இனங்காண சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ளவாறு போக்குவரத்துச் சேவைக் குறிப்புக்களை மாதாந்தம் பூரணப்படுத்த வேண்டியிருப்பினும் மீளாய்வு வருடத்தில் அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 ஜூலை 14 ஆம் திகதிய 4/2015 இலக்கத்தைக் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | சந்தையினுள் செயற்படும் இலங்கை காப்புறுதிச் சபையில் பதிவுசெய்யப்பட்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களிலிருந்து விலைமனு கோரப்பட்டு அதன்மூலம் காப்புறுதிப் பாதுகாப்பை மேற்கொள்ள வேண்டியிருப்பினும் திணைக்களத்துக்குரிய வாகனங்களுக்கு விலைமனு கோரலின்றி நேரடியாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து காப்புறுதிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2016 மார்ச் 31 ஆம் திகதிய 5/2016 இலக்கத்தைக் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தி | வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பை நடாத்தி குறித்த அறிக்கையை எதிர்வரும் வருடத்தின் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்பு கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் வருடத்துக்குரிய பொருட்கணக்கெடுப்பு அறிக்கைகள் 03 மாத காலத்துக்குப் பின்னர் 2022 ஜூலை 21 ஆம் திகதி கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அத்துடன் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 11 தோட்டங்களுக்குரிய பொருட்கள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 இலக்கத்தைக் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 11.1 ஆம் பந்தி | பொருட்கள் கணக்கெடுப்புக் குழு நியமிப்பு குறித்த நிதியாண்டின் டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய பொருட்கள் கணக்கெடுப்புக் குழு நியமிப்பு உரிய காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |

**2.5 வங்கிக் கணக்குகளைக் கையாளுதல்**

திணைக்களத்தினால் நடாத்திச் செல்லப்படும் பொது நடைமுறைக் கணக்கில் சில வருடகாலமாக இனங்காணப்படாத நேரடிப் பெறுதல்கள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன் 2023 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு தயாரிக்கப்பட்ட வங்கிக்கணக்கிணக்கக் கூற்றுக்கு அமைய இனங்காணப்படாத நேரடிப் பெறுதல்களின் கூட்டுத்தொகை ரூபா. 2,719,188.00 ஆகும்.

**3. செயற்பாடுகளுக்கான மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

**3.1.1. வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 இலக்கத்தைக் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 12.1 ஆம் பிரிவுக்கு இணங்க நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது 2022 நவம்பர் 16 ஆம் திகதியாகும்.

(ஆ) திணைக்களத்தினால் இனங்காணப்பட்டுள்ள 10 செயலாற்றுகைச் சுட்டிகளுள் 03 இனது மெய்யான வெளியீடு, எதிர்பார்க்கை முடிவின் நூற்றுக்கு 50 ஐ விடக் குறைவான மட்டத்தில் காணப்பட்டதுடன் தோட்ட முகாமைத்துவப் பிரிவில் எதிர்பார்க்கை வெளியீடு நூற்றுக்கு 54 சதவீதமான எதிர்மறையான நிறைவைக் கொண்டிருந்தது.

**3.2 சொத்து முகாமைத்துவம்**

(அ) பல்வகைப்பட்ட பெருந்தோட்டங்களின் (எஸ்டேட்) கீழ் ஒப்படைக்கப்பட்ட 11 தோட்டச் சொத்துக்கள் 2022 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் பொது நம்பிக்கைப்பொறுப்பாளரினால் முகாமைத்துவம் செய்யப்பட்டு குறித்த சொத்துக்களை முறையாக முகாமைத்துவம் செய்து அவற்றின் வருமானத்திலிருந்து நிறுவுனரின் நோக்கத்தை நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறிருப்பினும் இந்த தோட்டங்களின் வருமானங்களை அதிகரிப்பதன் மூலமாக உரிய பெருந்தோட்ட உரிமையாளர்களின் நோக்கத்தை நிறைவேற்ற போதியளவிலான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்படுவதுடன் மீளாய்வு செய்யப்படும் வருடத்தில் தோட்டங்களின் நிகர நட்டம் ரூபா. 2,526, 485.00 ஆகம் என காணப்பட்டது.

(ஆ) முழுமையான காணியின் அளவு 17 ஏக்கர்களைக் கொண்ட ஹரி ஹப்புகொட பெருந்தோட்டத்துக்கு உரித்தான காலி நியாகம பிரதேசத்தின் மத்தக்க வத்த எனும் பெயருடைய காணியின் 1 ஏக்கர் 1 ரூட் 2 பேர்ச்சஸ் ஆகியவற்றைக் கொண்ட ஒரு காணி, குறிப்பாக இனங்காணப்பட்டு பாதுகாப்பு எல்லைகளை நிர்ணயிப்பதற்கும் பாதுகாப்பு வேலிகளை நட்டு விவசாயச் செயற்பாட்டுக்காக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஹரி ஹப்புகொட பெருந்தோட்டத்துக்கு உரித்தான சுதுவலிபொத்த தோட்டத்தின் அன்குதுவ எனும் பெயருடைய நிலத்தின் ஒரு பகுதியில் 13.5 ஏக்கர் அளவிலான இறப்பர் பயிரிடப்பட்ட காணியில் மீண்டும் பயிர்களை நட முடியும் என காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. இந்த தோட்டத்தில் காணப்படும் அனுமதி பெறப்படாத நிர்மாணிப்புக்கள் தொடர்பாகவும் திணைக்களத்தினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்குறிப்பிடப்பட்ட தோட்டத்தில் தோட்ட பங்களா துரிதமாக புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) என்.டீ.எஸ். சில்வா விஜேசிங்க பெருந்தோட்டத்துக்கு உரித்தான களுத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள றிச்மன்ட் மாளிகை 100 வருடங்களுக்கும் அதிகமான வரலாற்றைக் கொண்ட தொல்பொருள் பெறுமதிகொண்ட புராதன மாளிகையொன்றாக இருப்பதால் துரிதமாக பாதுகாக்கப்பட வேண்டிய தேவையொன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. மேலும், மேற்குறிப்பிடப்பட்ட பெருந்தோட்ட உரிமையாளரின் இறுதி விருப்பாவணத்தில் தொல்பொருள் பெறுமதிகொண்ட அருங்கலைப் பொருள் பட்டியலொன்று குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்த அருங்கலைப் பொருட்கள் மேற்குறிப்பிடப்பட்ட மாளிகையில் களஞ்சியப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறிருப்பினும் அந்த அருங்கலைப் பொருட்களுள் ஒருசில அருங்கலைப் பொருட்கள் மாத்திரமே திணைக்களத்தின் காப்புப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருப்பதாகவும் ஏனைய அருங்கலைப் பொருட்கள் காணப்படும் இடம் குறித்து தேடிப்பார்க்க திணைக்களத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

(உ) ஐ.டப்ளியூ.சி. விஜேரத்ன பெருந்தோட்டத்துக்கு உரித்தான நோர்ட்டன் பிரிஜ்ஜில் அமைந்துள்ள வீடு மற்றும் காணி 1993 டிசம்பர் 07 ஆம் திகதி முதியோர் இல்லமொன்றை நடாத்திச்செல்லும் பொருட்டு கினிகத்ஹேன பிரதேச செயலகத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் பெருந்தோட்டத்துக்குரித்தான அசையாச்சொத்து, வேறு தரப்பினருக்கு வழங்கப்படும்போது வீட்டை ஒப்படைப்பது மற்றும் பராமரிப்பது போன்ற விடயங்கள் தொடர்பாக உரியமுறையில் இணக்கமொன்றை ஏற்படுத்திக்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தமொன்றுக்கு வரவேண்டியிருந்தும் 29 வருடங்கள் கடந்திருந்தாலும், முறையான ஒப்பந்தமொன்றைச் செய்திருக்கவில்லை.

(ஊ) சி.ஈ வனிகசூரிய பெருந்தோட்டத்துக்கு உரித்தான சொத்தை விற்று பெருந்தோட்டக்காரரின் பெயரில் நம்பிக்கைப்பொறுப்பொன்றைத் தாபிப்பதற்கு பொதுநம்பிக்கைப் பொறுப்பாளருக்கு 2005 நவம்பர் 10 ஆம் திகதி நிர்வாக அதிகாரம் கிடைத்திருந்தது. அவ்வாறிருப்பினும், அந்த பெருந்தோட்டத்துக்கு உரித்தான ஒருசில சொத்துக்களை விற்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் இணை சொத்துக்களின் உரிமைத்துவத்தை இனங்கண்டுகொண்டு பொதுநம்பிக்கைப் பொறுப்பாளரின் உரிமை உறுதியாகுமாறு பாதுகாப்பதற்கும் அந்த சொத்துக்களை விற்று பெருந்தோட்டக்காரரின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.3 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதியொழுங்கு விதிகளின் நிதி ஒழுங்கு 880 இன் பிரகாரம், அரச உத்தியோகத்தர்களின் பிணைகள் கட்டளைச்சட்டத்தின் 612 ஆம் அதிகாரத்துக்கு ஏற்ப பிணை வைக்கவேண்டிய அலுவலர்களிடமிருந்து பிணை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

2007 ஜனவரி 27 ஆம் திகதி 65 - 0763 ஆம் இலக்க வாகனத்துக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாகவுள்ள ரூபா 254, 038 பெறுமதியான நட்டத்தை உரிய சாரதியிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்காக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கு குறித்து தொடர்செயற்பாடு மேற்கொள்ளப்படாமை காரணமாக காலவிதிப்பின் அடிப்படையில் ரத்துச் செய்யப்பட்டிருந்தது. அத்துடன், விபத்து ஏற்பட்டு 15 வருடங்கள் கடந்த போதிலும் குறித்த நட்டத்துக்குப் பொறுப்புச்சொல்ல வேண்டிய ஆளிடமிருந்து அறவிடப்பட்டு புத்தகங்களிலிருந்து வெட்டியகற்றப் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.5 முகாமைத்துவப் பலவீனங்கள்

(அ) டீ.எஸ்.டப்ளியூ. சமரக்கோன் பெருந்தோட்டத்துக்கு உரித்தான சைமண்டேல்வத்த காணியில் அரசுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 16 ஏக்கர் 01 ரூட் 35 பேர்ச்சர்ஸ் காணிக்கென தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத்தொகை தொடர்பில் கெஸ்பேவ பிரதேச செயலாளரினால் இரண்டு சந்தர்ப்பங்களில் முறையே 2.63 மில்லியன் ரூபா எனவும் 1.79 மில்லியன் ரூபா எனவும் அறியத்தரப்பட்டிருந்தும் குறித்த வேறுபாட்டைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் இந்த அறிக்கையின் திகதியாகும் போதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1968 ஆகஸ்ட் 11 ஆம் திகதி சிங்கப்பூரில் இறந்த திருமதி புளோரன்ஸ் ஈனிட் விதம் அவர்களின் இலங்கையில் காணப்பட்ட அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை விற்றுக் கிடைக்கப்பெறும் பணம் உரித்தாளர்களுக்கு / பயனாளிகளுக்கு வழங்குவதற்காக அட்டோர்னி தத்துவகாரராக பொது நம்பிக்கைப்பொறுப்பாளர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் சொத்து விற்பனை செய்யப்பட்டபிறகு கிடைக்கப்பெற்ற ரூபா. 64,645,776.00 பணத்திலிருந்து உரித்தாளர்கள் / பயனாளிகள் 30 பேர்களுக்கு ரூபா. 35,880,064.00 பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 16 பேர்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ள ரூபா. 28,765,712.00 பணம், சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டு 23 ஆண்டுகாலமாகியும் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆர்.எல்.எச். சந்திரசேகர என்பவரின் அனுராதபுர மாவட்டத்தில் பொத்தானேகமவில் உள்ள காணி தொடர்பாக தொடுக்கப்பட்டிருந்த வழக்கில் பொது நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு உரித்தான மேட்டுக் காணியின் 30 பேர்ச்சர்ஸ் மற்றும் வயல்நிலம் 05 ஏக்கர் போன்றவற்றுக்கு தற்காலிகப் பொறுப்பாளர் ஒருவரை நியமித்திருந்த போதிலும் முறையான குத்தகை ஒப்பந்தமொன்றுக்கு வருவதற்கு இந்த அறிக்கையின் திகதியாகும் போதும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் குறிக்கப்பட்டவாறு இன்று விவசாயியால் பயிரிடப்பட்ட வயலின் அளவு, மேட்டுக் காணியின் அளவு மற்றும் அதன்மூலம் கிடைக்கப்பெற்ற அறுவடை தொடர்பாக திணைக்களத்தினால் மேற்பார்வை அல்லது தொடர் செயற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை என்றும் இன்று விவசாயியால் அவரது விருப்பத்திற்கு ஏற்றவாறு செலுத்தப்படும் மரபுரிமையை மாத்திரம் பொறுப்பேற்று கணக்கிலிடப்பட்டது என்றும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2013 ஆம் ஆண்டில் காட்டப்பட்ட பயனுறுதியின்படி முகாமைத்துவம் செய்யப்படாத வீரசிங்க அபேநாயக்க பெருந்தோட்டத்துக்கு உரித்தான மாத்தறை களஞ்சிய வீதியிலுள்ள 32 பேர்ச்சர்ஸ் அளவிலான விசாலமான காணியும் கட்டடமும் 2013 பெப்ரவரி 05 ஆம் திகதி மாதாந்த வாடகையாக 8,000.00 ரூபாவுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் குத்தகை ஒப்பந்தம் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்தது. இந்தச் சொத்தை விற்பதற்காக வழக்கு எண் 97/16 இன் கீழ் 2016 செப்டம்பர் 29 ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் மாவட்ட நீதிபதியின் அனுமதி பெறப்பட்டிருந்த போதிலும் சொத்தை விற்று நிதியத்துக்கு வைப்பிலிடுவதற்குப் பதிலாக முறையான குத்தகை ஒப்பந்தமொன்றைச்

செய்யாது மேற்குறிப்பிடப்பட்ட குத்தகைதாரருக்கே மாதாந்தம் 10,000.00 ரூபா தொகைக்கு குத்தகை விடப்பட்டிருந்தது.

(உ) டீ.ஜே.டீ.ஜே. அபேசேகர பெருந்தோட்டத்துக்கு உரித்தான காலி எல்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள கடை மற்றும் காணி 20 வருடங்களுக்கும் அதிகமான காலத்திலிருந்து ஒப்பந்தங்கள் எதுவுமின்றி குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் 1,100,000.00 ரூபாவாக மதிப்பிடப்பட்ட இந்த கடைக்காக 2018 மே வரை 227,380.00 ரூபாவும், காணிக்காக 2005 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரைக்கும் 143,400.00 ரூபாவும் என குத்தகைத் தொகை அறவிடப்பட வேண்டும் என கணக்கிடப்பட்டிருந்த போதிலும் குத்தகைப் பணத்தை அறவிடுவதற்கு இந்த அறிக்கையின் திகதியாகும் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நுகேகொட பிரதேசத்தை வதிவிடமாகக்கொண்ட ஜீ.எஸ். ஜயசூரிய என்பவரின் பெருந்தோட்டம் தொடர்பான நிர்வாக அதிகாரம் 1982 ஆம் ஆண்டில் பொது நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு கிடைக்கப்பெற்றிருந்ததுடன் பெருந்தோட்டக்காரரின் மறைந்த முதல் மனைவிக்கு உரித்தாகவிருந்த காணியொன்று 1999 ஆம் ஆண்டில் அரசுக்குச் கையகப்படுத்தப்பட்டிருந்தது. அதேபோல அவரின் இறுதி விருப்பாவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனைகளின் அடிப்படையில் அந்தக் காணிக்காக பெருந்தோட்டக்காரருக்கு உரித்தில்லாதிருந்தது. அப்படியிருந்த போதிலும் அந்த காணிக்காக வழக்கொன்றைத் தொடுத்து நட்டஈட்டு உரித்தைக் கோரி 2000 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டுவரைக்குமான சட்டத்தரணியின் கட்டணமாக 2,962,430.00 ரூபா செலவிடப்பட்டிருந்தது. 2019 ஒக்டோபர் 23 ஆம் திகதியிடப்பட்ட 522/00/විශේෂ எனும் இலக்கத்தைக்கொண்ட அந்த வழக்கின் கட்டளையின் பிரகாரம் குறித்த சொத்துக்குரிய நட்டஈட்டு உரித்தொன்று இல்லை என தீர்க்கப்பட்டிருந்தது. அதனால் உரித்தில்லாத சொத்தொன்றுக்காக தேவையற்ற முறையில் நேரமும் நிதியும் செலவழிக்கப்பட்டிருந்ததுடன் தொடர்ந்தும் சட்டத்தரணியின் கட்டணம் செலுத்தப்பட வேண்டிக் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.

(எ) ஹரி ஹப்புகொட அவர்களின் இறுதி விருப்பாவணத்தின் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் பெருந்தோட்ட வருமானத்திலிருந்து 1/5 சேமிக்கப்பட வேண்டும் என்றும், அந்த சேமிப்பு 100,000.00 ரூபாவாகும் போது அது மாணவர்புலமைப்பரிசிலை வழங்கவும் அனர்த்த நிலைமைகளின் போது நிவாரணங்களை வழங்குவதற்கும் சேர்க்கப்பட்டு வைக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறிருப்பினும் குறித்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தினால் வருமானம் சேமிக்கப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரைக்குமான 5 வருட காலப்பகுதியினுள் 24,865,439.00 ரூபா வருமானம் ஈட்டப்பட்டிருந்ததுடன் அதிலிருந்து 4,973,088.00 ரூபா சேமிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும் அவ்வாறு சேமித்துவைக்கப்பட்டிருக்கவில்லை. தோட்டங்கள் தொடர்பில் உரிய முகாமைத்துவத்துடன் செயற்பாடுகளை மேற்கொள்ளாதிருப்பது காரணமாக சமகாலத்தில் உரிய தோட்டங்களில் பற்றுமீதி நிலவுவதும் அதனால் பெருந்தோட்டங்களுக்குரிய நோக்கங்களை நிறைவேற்ற முடியாதுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

(ஏ) திறக்கப்படாத 254 இறுதி விருப்பாவணங்கள் திறக்கப்படல் தொடர்பான சட்ட நடவடிக்கைகளுக்காக 2,629,250.00 ரூபா செலவழிக்கப்பட்டிருந்ததுடன் அந்த செலவு டீ.எஸ்.டப்ளியூ. சமரக்கோன் பெருந்தோட்ட நிதியத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த பெருந்தோட்டத்துக்குரிய நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் பெருந்தோட்டக்காரரால் தனது இறுதி விருப்பாவணத்தில் குறிப்பிட்டுக் கூறப்பட்டிருந்தமையால் இந்த செலவைப் பொறுப்பேற்பது பெருந்தோட்டகாரரின் நோக்கங்களுக்கு எதிரானது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஐ) 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் வங்கி நிலுவை மொத்தம் 14,950,471.00 ரூபாவாக பற்றுமீதியொன்று ஏற்படும் வகையில் பொறுப்பு / சொத்துக்கள் 10 தொடர்பில் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்தடன் அதில் பொறுப்பு / சொத்துக்கள் 6 இற்கு உரியவாரான மொத்தம் 1,325,505.00 ரூபாவான பற்றுமீதியை கொடுத்துத்தீர்க்கவென இந்த பெருந்தோட்டங்களில் முதலீடு எதுவும் இல்லை.

(ஒ) பொறுப்பு மற்றும் சொத்துப் பிரிவுகளில் வெவ்வேறாக நிலையான சொத்துக்கள் ஆவணத்தைக் கொண்டுநடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) பொறுப்பு மற்றும் சொத்துக்களுக்குரிய நிலையான சொத்துக்களின் வளங்குறைத்தலுக்கென இந்த அறிக்கையின் திகதியாகும் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நிலைபேண்தகு அபிவிருத்தி

### 4.1. நிலைபேண்தகு அபிவிருத்தியின் நோக்கங்களை நிறைவேற்றுவதின் முன்னேற்றம்

திணைக்களத்தினால் 05 நிலைபேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன், அதில் சுகாதார மேம்பாடு மற்றும் தரைச்சூழல் அமைப்பைப் பாதுகாத்தல் எனும் நோக்கங்களை நிறைவேற்றும் செயலாற்றுகை முறையே நூற்றுக்கு 24 எனவும் மற்றும் நூற்றுக்கு 47 எனவும் காட்டப்பட்டு குறைந்தளவு மட்டத்தில் காணப்பட்டது.

## 5. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 இணைக்கப்பட்டுள்ள பணியாட்தொகுதியினர் மற்றும் உள்ளபடியான பணியாட்தொகுதியினர்

(அ) மீளாய்வு வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு திணைக்களத்தில் அனுமதிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் 87 என்றாலும் உள்ளபடியான பணியாட்தொகுதியினர் 67 ஆகும். அதற்கேற்ப, 19 உத்தியோகத்தர்களின் வெற்றிடம் காணப்படுவதுடன் 2015 ஆம் ஆண்டிலிருந்து மொழிபெயர்ப்பாளர் பதவி வெற்றிடம் நிலவுவதும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 ஆம் இலக்கத்தைக் கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 5 வருடங்கள் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றியுள்ள எல்லா உத்தியோகத்தர்களுக்கும் வேறு சேவை நிலையங்களில் பணியாற்றுவதற்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டுமெனினும் திணைக்களத்தினுள் 5 வருடங்களைக் கடந்த 18 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

ஒப்பம்: எச்.எம். றணசிங்க பண்டா
சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் அதிபதிக்காக

*04* **அத்தியாயம் - செயலாற்றுகைக் குறிகாட்டிகள்**

*4.1* **நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)**

| விசேட குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் சதவீதமாக *(%)* உள்ளபடியான வெளியீடு | | | |
|---|---|---|---|---|
| | *100%- 90%* | *75%-89%* | *50%- 74%* | *00%- 49%* |
| *1.*சகாய நிதி கொடுப்பனவுகள் | - | - | 70% | - |
| *2.*மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் | - | 82% | - | - |
| *3.*சமயத் தலங்களின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திக்கான கொடுப்பனவு | 91% | - | - | - |
| *2.*தர்மக் கொடுப்பனவுகள் | 93% | - | - | - |
| *5.* அநாதரவுக் கொடுப்பனவு | 94% | - | - | - |
| 6. Personal trust payments | 159% | - | - | - |
| 7. Other payments according to trust objectives | 172% | - | - | - |
| 8. Releasing of temple compensation | - | - | - | 20% *** |
| 9. Releasing of foreign compensation | - | 75% | - | - |
| 10.Estate management | | | | (26%) |

*5.* **அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களின் *(SDG)* அடைவுச் செயலாற்றுகை**

**5.1 அடையாளம் காணப்பட்ட உரிய நிலைபேறான அபிவிருத்திக்குறிக்கோள்களைக் குறிப்பிடுக.**

| இலக்கு.·. குறிக்கோள் | இலக்கு | வெற்றிச் சுட்டிகள் | இதுவரைபெற்றவெற்றிகளின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| சமத்துவமான,தரமானகல்வி | புலமைப்பரிசில் வழங்குதல் | புலமைப்பரிசில் பெறுவோரின் எண்ணிக்கை | - | 70% | - |
| சுகாதாரமேம்படுத்தல் | நோயாளிகளுக்குஉதவி வழங்குதல் | நோயாளிகளின் எண்ணிக்கை | - | - | 82% |
| பிராந்தியசுற்றாடல் கட்டமைப்பைபாதுகாத்தல் | கருணைக்கொடைசெலுத்துதல் | கருணைக்கொடைபெறுவோரின் எண்ணிக்கை | - | - | 93% |
| வறுமையைஒழித்தல் | ஆதரவற்றோர் கொடுப்பனவுசெலுத்துதல் | ஆதரவற்றோர் கொடுப்பனவுபெறுவோர் எண்ணிக்கை | - | - | 94% |
| சமாதானமான,நியாயமானநிறுவனத்தைஉருவாக்குதல் | நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டிடங்களுக்குஉதவிவழங்குதல் | சமயவழிபாட்டிடங்களின் எண்ணிக்கை | - | - | 91% |

*5.2* **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்வதன் அடைவுகள் மற்றும் சவால்களைச் சுருக்கமாக விளக்குக.**

## 06 - அத்தியாயம் - மனித வள விபரக் குறிப்பு

### 06.1பதவியணி முகாமை

| | அனுமதியளிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | தற்போதுள்ள ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்கள்/ (மேலதிகம்)** |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 08 | 06 | 02 |
| மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| இரண்டாம் நிலை | 61 | 48 | 13 |
| ஆரம்ப நிலை | 17 | 17 | 00 |

### 06.2 மூழுநிறுவனத்தின் செயலாற்றுகையில் மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகை எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளது என்பதனை சுருக்கமாக குறிப்பிடுக.

நம்பிக்கைப்பொறுப்பு திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் 88 ஆக காணப்படுவதுடன், அவற்றுள் இதுவரைக்கும் 16 வெற்றிடங்கள் நிலவுகின்றன. திணைக்களத்தில் இணைக்கப்பட்டுள்ள (முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத வகுதி 2) உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களாக பதவியுயர்வு பெற்று நிறுவனத்திலிருந்து மாற்றலாகிச் சென்றுள்ளதுடன் அதன் காரணமாக குறித்த பதவி வறிதாகுவதால் ஆத நிறுவனத்தின் செயலாற்றுகையில் நேரடியாகத் தாக்கம் செலுத்தியுள்ளது. இதனால் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் அனுமதிக்கப்பட்ட பணியாட்தொகுதியினரை அதிகரித்துக் கொள்வதற்கான படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 06.3 மனிதவள அபிவிருத்தி

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சிவழங்கப்பட்டபணியாளர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சியின் காலஅளவு | மொத்தமுதலீடு (ரூ.) | | நிகழ்ச்சியின் தன்மை(உள்நாடு.·.வெளிநாடு) | நிறைவு.·.பெற்றுக் கொண்டஅறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| அலுவலக முறைமை | 04 | நாட்கள் 2 | ரூ. 4000.00 | - | உள்நாடு | அலுவலக முறைமை பற்றிய அறிவு |
| ளுஅயசவ முகககைஉந | 02 | 03 | ரூ.36,000.00 | - | " | குணினி தொழில்நுட்பம் பற்றிய அறிவு |
| ஆரசவாகன பராமரிப்பு | 01 | 01 | ரூ.5,000.00 | - | " | வுாகன பராமரிப்பு பற்றிய அறிவு |
| அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரமாணம் | 02 | 02 | ரூ.20,000.00 | - | " | அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரமாணம் பற்றிய அறிவு |
| உள்ளக கணக்காய்வு | 02 | 03 | ரூ.60,000.00 | - | " | உள்ளக கணக்காய்வு பற்றிய அறிவு |
| ஒழுக்க நடபடிமுறை | 01 | 02 | ரூ.9500.00 | - | " | ஒழுக்க நடபடிமுறை பற்றிய அறிவு |
| ஆரச உத்தியோகத்தர்களின் சம்பள தயாரிப்பு | 01 | 01 | ரூ.5,000.00 | - | " | ஆரச உத்தியோகத்தர் களின் சம்பள தயாரிப்பு பற்றிய அறிவு |
| தமிழ் மொழி பாடநெறி | 22 | 25 | - | - | " | தமிழ் மொழி பற்றிய அறிவு |
| சிறுவர் து’பிரயோகம் மற்றும் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் குற்றங்கள் குறித்து தெளிவுபடுத்தும் விரிவுரை நடாத்தப்பட்டது. | எல்லா உத்தியோகத்தர் களும் | 01 | ரூ.36,700.00 | - | - | சிறுவர் துʻபிரயோகம் மற்றும் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் குற்றங்கள் அத்துடன் அவற்றைத் தடுப்பதற்காக மேற்கொள்ள முடியுமான செயற்பாடுகள் பற்றிய அறிவு |
| இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுத்தல் ஆணைக்குழுவினால் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுத்தல் எனும் தலைப்பில் அறிவுறுத்தும் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. | எல்லா உத்தியோகத்தர் களும் | 01 | - | - | - | இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுத்தல் பற்றிய அறிவு |

## 07 அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை

| இலக்கம் | ஏற்புடையதாகப்பட வேண்டிய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கப்பாடானது/ இணக்கப்பாடற்றது) | இணக்கப்பட்டற்றது எனின் அதற்கான சுருக்க விளக்கம் | இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரிசெய்யும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதிக் கூற்றுக்கள்/ கணக்கிற்கான உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்றுக்கள் | இணக்கமானது | - | - |
| 1.2 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் | இணக்கமானது | - | - |
| 1.3 | வியாபார மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | ஏற்புடையதன்று. | - | - |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | ஏற்புடையதன்று. | - | - |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | ஏற்புடையதன்று. | - | - |
| 1.6 | ஏனையவை | ஏற்புடையதன்று. | - | - |
| 2 | **புத்தகங்கள் மற்றும் ஆவணங்களின் பராமரிப்பு (நி.பி. 445)** | | | |
| 2.1 | 267/2018 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்க நிலையான சொத்துப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.2 | தனிப்பட்ட வேதனாதி ஆவணங்களை/ தனிப்பட்ட வேதனாதி அட்டைகளை இற்றைப்படுத்தி பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.3 | கணக்காய்வு கேள்வி ஆவணங்களை இற்றைப்படுத்தி பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.4 | உள்ளகக் கணக்காய்வு அறிக்கை ஆவணங்களை இற்றைப்படுத்தி பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்குச் சுருக்கங்களையும் (CIGAS) தயாரித்து உரிய தினத்தில் பொதுத் திறைசேரிக்குச் சமர்பித்தல் | இணக்கமானது | - | - |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை ஆவணங்களை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.7 | இன்வென்றிப் பதிவேடுகளை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.8 | கையிருப்பு பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.9 | சேதங்கள்/நட்டங்கள் பதிவேடுகளை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.10 | பொறுப்புக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 2.11 | உப பத்திரிகைப் புத்தகப் பதிவேட்டை (GA - N20) இற்றைப்படுத்திப் பேணி வருதல் | இணக்கமானது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| *03* | **நிதி நிர்வாகத்திற்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. *135)*** | | | |
| *3.1* | நிதி அதிகாரங்களை நிறுவனத்தினுள் பரவலாக்கம் செய்தல் | இணக்கமானது | - | - |
| *3.2* | நிதி நிர்வாக அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக நிறுவனத்தினுள் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | இணக்கமானது | - | - |
| *3.3* | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலையும் இரண்டு உத்தியோகத்தர் ஊடாக அனுமதி பெறும் விதத்தில் அறிகாரங்களை ஒப்படைத்திருத்தல் | இணக்கமானது | - | - |
| *3.4* | *2014.05.11* ஆம் திகதி *171/2004* ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு இணங்க, அரசாங்க சம்பளத் தாள் மென்பொருளைப் பயன்படுத்தும் போது கணக்காளர்களின் கட்டுப்பாட்டு உட்பட்ட வகையில் செயற்படுதல் | இணக்கமானது | - | - |
| *4* | **வருடாந்த திட்டத்தை தயாரித்தல்** | | | |
| *4.1* | வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல் | இணக்கமானது | - | - |
| *4.2* | வருடாந்த பெறுகைத் திட்டத்தை தயாரித்தல் | இணக்கமானது | - | - |
| *4.3* | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல் | இணக்கமானது | - | - |
| *4.4* | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்து தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | - | - |
| *4.5* | வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்றை உரிய தினத்தில் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் | இணக்கமானது | - | - |
| *5* | **கணக்காய்வுக் கேள்விகள்** | | | |
| *5.1* | கணக்காய்வாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்படும் திகதியில், அனைத்து கணக்காய்வு கேள்விகளுக்கும் பதிலளித்திருத்தல் | இணக்கமானது | - | - |
| *6* | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| *6.1* | நி.பி. *134(2) DMA/1-2019* இற்கு இணங்க, வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்துரையாடிய பின்னர், உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல் | இணக்கமானது | - | - |
| *6.2* | ஒவ்வொரு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்தினுள் பதிலளித்திருத்தல் | இணக்கமானது | - | - |
| *6.3* | *2018* ஆம் ஆண்டின் *19* இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் *40(4)* ஆம் உப பிரிவிற்கு இணங்க அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| *6.4* | நிதிப் பிரமாணம் *134 (3)* இற்கு இணங்க, அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணக்கமானது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| *7* | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்** | | | |
| *7.1* | *DMA* சுற்றறிக்கை *1-2009* இற்கு இணங்க, ஆகக் குறைந்தது *04* கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை உரிய வருடத்தினுள் நடாத்தியிருத்தல் | இணக்கமானது | | |
| *8* | **சொத்து முகாமை** | | | |
| *8.1* | *01/2007* ஆம் இலக்க சொத்து முகாமைச் சுற்றறிக்கையின் *07* ஆம் அத்தியாயத்திற்கு இணங்க, சொத்துக்களை கொள்வனவு செய்தல், அகற்றுதல் தொடர்பான தகவல்களை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| *8.2* | மேற்குறித்த சுற்றறிக்கையின் *13* ஆவது அத்தியாயத்திற்கு இணங்க, அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒருங்கிணைப்புக்களைச் செய்வதற்குப் பொருத்தமான தொடர்பாடல் உத்தியோகத்தர் ஒருவர் நியமித்து அந்த உத்தியோகத்தர் தொடர்பான தகவல்களை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிவித்திருத்தல். | இணக்கமானது | - | - |
| *8.3* | *05/2016* ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க, பொருட் தொகை மதிப்பாய்வுகள் நடாத்தப்பட்டு குறித்த அறிக்கைகள் உரிய தினத்தில் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணக்கமானது | | |
| *8.4* | வருடாந்த பொருட் தொகை மதிப்பாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய சிபாரிசுகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| *8.5* | கழித்தொதுக்கப்பட்ட பொருட்களை நி.பி. *772* இற்கு இணங்க அகற்றுதல் | இணக்கமானது | | |
| *9* | **வாகன முகாமை** | | | |
| *9.1* | தொகுதியிலுள்ள வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்தச் சுருக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உரிய தினத்தில் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல | இணக்கமானது | | |
| *9.2* | வாகனங்கள் கழித்து ஒதுக்கப்பட்டு *06* மாதங்களுக்கு குறைவான காலத்தில் அகற்றப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| *9.3* | வாகனச் சம்பவத் திரட்டுப் புத்தகங்களை இற்றைப்படுத்தி பேணி வருதல் | இணக்கமானது | | |
| *9.4* | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பிலும் நி.பி. *103, 104, 109, 110* என்பவற்றுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| *9.5* | *2016.12.29* ஆம் திகதிய *2016/30* ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் *3.1* ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, வாகனங்களின் எரிபொருள் தகனத்தை மீளப் பரிசோதித்தல் | இணக்கமானது | | |
| *9.6* | குத்தகை காலப் பகுதியின் பின்னர், குத்தகை வாகனங்களின் சம்பவத் திரட்டுப் புத்தகங்களின் முழுமையான உரிமையை பராதீனப்படுத்திப் பெற்றிருத்தல் | ஏற்புடையதன்று. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| *10* | **வங்கி கணக்கு முகாமை** | | | |
| *10.1* | உரிய தினத்தில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து சான்றுப்படுத்தி கணக்காய்வுக்குச் சமர்ப்பித்திருத்தல் | இணக்கமானது | - | - |
| *10.2* | மீளாய்வாண்டில் அல்லது அதற்கு முன்னைய வருடங்களிலிருந்து முன் கொண்டு வரப்பட்ட செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| *10.3* | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் செம்மையாக்கம் செய்ய வேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுத்து அந்த மீதிகளுக்கு ஒரு மாத காலத்தினுள் தீர்வு காணப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| *11* | **ஏற்பாடுகளின் பயன்பாடு** | | | |
| *11.1* | செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை அவற்றின் வரையறைகளை விஞ்சாத விதத்தில் செலவிடுதல் | இணக்கமானது | - | - |
| *11.2* | நி.பி. *94(1)* இற்கு இணங்க வழங்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் வருட முடிவில் எஞ்சும் ஏற்பாட்டு வரையறைகளை விஞ்சாத விதத்தில் பொறுப்புக்களை ஏற்றல் | இணக்கமானது | | |
| *12* | **அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள்** | | | |
| *12.1* | வரையறைகளுக்கு இணக்கமாக இருத்தல் | இணக்கமானது | - | - |
| *12.2* | அறவிடப்படாதுள்ள கடன் மீதிகள் பற்றி காலப் பகுப்பாய்வொன்றைச் செய்திருத்தல் | இணக்கமானது | - | - |
| *12.3* | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகக் காணப்படும் அறவிடப்படாத கடன் மீதிகளை தீர்த்திருத்தல் | இணக்கமானது | - | - |
| *13* | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| *13.1* | காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் நி.பி. *571* இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருத்தல் | இணக்கமானது | - | - |
| *13.2* | பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாடுக் கணக்கை இற்றைப்படுத்தி பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| *14* | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| *14.1* | மீளாய்வாண்டின் இறுதியில் காசேட்டு மீதியை திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பியிருத்தல் | இணக்கமானது | - | - |
| *14.2* | நி.பி. *371* இற்கு இணங்க வழங்கப்பட்ட உள்ளபடியான இடைக்கால கட்டுநிதியை, அந்நோக்கம் முடிவடைந்து ஒரு மாத காலத்தினுள் தீர்த்திருத்தல் | இணக்கமானது | - | - |
| *14.3* | நி.பி. *371* இற்கு இணங்க, அனுமதிக்கப்பட்ட வரையையறையை விஞ்சாத விதத்தில் உள்ளபடியான இடைக்கால கட்டுநியை விடுவித்திருத்தல் | இணக்கமானது | - | - |
| *14.4* | கட்டுநிதிக் கணக்கின் மீதியை, திறைசேரியிந் ஏடுகளுடன் மாதாந்தம் ஒப்புநோக்குதல் | இணக்கமானது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | உரிய பிரமாணங்களுக்கு இணங்க, சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து மீளச் செலுத்தப்பட்டிருத்தல் | ஏற்புடையதன்று. | | |
| 15.2 | சேகரிக்கப்பட்டிருந்த வருமானத்தை, வைப்புக் கணக்குகளில் வரவு வைக்காது நேரடியாக வருமானத்தில் வரவு வைத்திருத்தல் | ஏற்புடையதன்று. | | |
| 15.3 | நி.பி. 176 இற்கு இணங்க நிலுவை வருமான அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையதன்று. | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அனுமதியளிக்கப்பட்ட பதவியணி வரையறைக்குள் பதவியணியை வைத்திருத்தல் | இணக்கமானது | - | - |
| 16.2 | பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல்கள் எழுத்து மூலம் வழங்கப்பட்டிருத்தல். | இணக்கமானது | - | - |
| 16.3 | 2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கைக்கு இணங்க அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 17 | **பொது மக்களுக்குத் தகவல்கள் வழங்குதல்** | | | |
| 17.1 | தகவலறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க தகவல் உத்தியோகத்தரொருவரை நியமித்து தகவல் வழங்கும் ஆவணமொன்றை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | இணக்கமானது | - | - |
| 17.2 | நிறுவனம் தொடர்பான தகவல்கள் அதன் இணையதளத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளதுடன், இணையதளத்தின் ஊடாக அல்லது மாற்று வழிகளின் ஊடாக நிறுவனம் தொடர்பில் பாராட்டுவதற்கு/ குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு பொது மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 17.3 | தகவலறியும் சட்டத்தின் 08 மற்றும் 10 ஆம் பிரிவுகளுக்கு இணங்க வருடத்திற்கு இரு முறை அல்லது வருடத்தில் ஒரு முறை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 18 | **பிரசைகள் பட்டயத்தை நடைமுறைப்படுத்துதல்** | | | |
| 18.1 | 05/2018 மற்றும் 05/2018 (I) ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு இணங்க பிரசைகள்/வாடிக்கையாளர் பட்டயமொன்று இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 18.2 | அச்சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்திக்கு இணங்க, பிரசைகள்/வாடிக்கையாளர் பட்டயத்தை இயற்றி நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காகவும் மதிப்பீடு செய்வதற்காகவும் நிறுவனத்தினால் முறைமையொன்று உருவாக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 19 | **மனித வளத் திட்டத்தை உருவாக்குதல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் இணைப்பு 02 படிவத்தை அடிப்படையாகக் கொண்டு மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| 19.2 | பதவியணியின் ஒவ்வொரு அங்கத்தவருக்கு வருடமொன்றுக்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வாய்ப்பொன்றை வழங்குவது மேலே குறிப்பிட்ட மனித வளத் திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| *19.3* | மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் அணைக் *01* இல் காட்டப்பட்டுள்ள படிவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பதவியணிக்குமான வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| *19.4* | மேற்குறித்த சுற்றறிக்கையின் *6.5* ஆம் பந்தியையும் இணங்க மனித வள அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல், திறன் விருத்தி நிகழ்ச்சிகளை உருவாக்குதல், தேர்ச்சி விருத்தி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல் என்பன தொடர்பான பொறுப்புக்களை ஒப்படைத்து சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | - | - |
| *20* | **கணக்காய்வுப் பந்திகளுக்குப் பதிலளித்தல்** | | | |
| *20.1* | முன்னைய வருடத்திற்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்திருத்தல் | இணக்கமானது | - | - |

**முற்றும்.**